**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p278-291** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# இந்திய அறிவு அமைப்பில் சித்த மருந்துத் தொழில்நுட்பங்களுக்கான தமிழ் மருத்துவ இலக்கியங்கள்

*Tamil Medical Literature for Siddha Pharmaceutical Technologies in the Indian Knowledge System*

**மரு. து. மாண்டெலா,**
உதவிப் பேராசிரியர், சித்த மருத்துவத்துறை,
அறிவியல் புலம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.

**Dr. T. Mantela,**
*Assistant Professor, Department of Siddha Medicine, Faculty of Science,*
*Tamil University, Thanjavur – 613 010.*
*Phone: 9600122766 Email: drmantela@gmail.com ORCiD: 0000-0001-8375-3718*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **08-09-2026**

*Corresponding Author
Email:
*drmantela@gmail.com*

**Abstract:**
Our Indian tradition possesses a deep-rooted history in fields such as astronomy, architecture, ecology, agriculture, and medicine. Within this tradition, Tamil heritage holds a primary position by virtue of its antiquity and literary richness. Tamil literature explains not only lifestyle based on land classification (Thinai) but also science. Just as traditional medicine holds immense importance in the Indian Knowledge System, the Tamil knowledge tradition remains incomplete without Tamil Siddha medicine. Various types of Siddha formulations form the core foundation of Siddha medicine, which was created by the Tamil language and Tamil Siddhas, and preserved by Tamils. The objective of this paper is to analyze and explain the Tamil literature that details the technologies behind the sixty-four categories of Siddha medicines. This paper explores various Tamil medical texts of the Siddhas and the information embedded within them regarding drug potency, ingredients that reduce potency, ingredients that enhance potency, and pharmaceutical preparation rules.

**Keywords:** *Indian Knowledge System, Tamil Medicine, Medical Literature, Siddha Medicines, Pharmaceutical Preparation Rules.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

வானியல், கட்டடக் கலை, சூழலியல், வேளாண்மை, மருத்துவம் முதலான துறைகளில் ஆழங்கால் பட்ட வரலாற்றைக் கொண்டது நம் இந்திய மரபு. அதில் காலத்தாலும் இலக்கியச் செறிவாலும் பிரதான நிலையை வகிப்பது தமிழர் மரபாகும். தமிழ் இலக்கியம் திணை அடிப்படையில் வாழ்வியலை மட்டுமல்ல அறிவியலையும் விளக்குகிறது. இந்திய அறிவு அமைப்பில் எவ்விதம் மரபு வழி மருத்துவம் முக்கியத்துவம் பெறுகிறதோ அவ்விதமே தமிழர் அறிவு மரபும் தமிழ் சித்த மருத்துவம் இன்றி முழுமையாகாது. தமிழாலும் தமிழ்ச் சித்தர்களாலும் தோற்றுவிக்கப்பட்டுத் தமிழர்களால் காக்கப்பட்டு வரும் சித்த மருத்துவத்தின் ஆதாரம் பல வகையான சித்த மருந்துகளே. அறுபத்து நான்கு வகைமையாய் விரியும் சித்த மருந்துகளின் தொழில்நுட்பங்களை விளக்கும் தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பல்வேறு சித்தர்களின் தமிழ் மருத்துவ இலக்கியங்களையும் அவற்றில் விரவிக் காணப்படும் மருந்தின் வீரியம், வீரியம் குன்றச் செய்யும் சரக்குகள், வீரியம் மிக்கச் செய்யும் சரக்குகள், மருந்து செய் விதிகள் குறித்த தகவல்களையும் இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள்:** இந்திய அறிவு அமைப்பு, தமிழ் மருத்துவம், மருத்துவ இலக்கியம், சித்த மருந்துகள், மருந்து செய் விதிகள்.

**முன்னுரை**

இலக்கியம், மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறுபட்ட கொடைகளை உலகிற்கு அளித்தது நம் இந்தியப் பாரம்பரியம் (Kale 2026). இமயம் முதல் குமரி வரை விரிந்த நிலப்பரப்பாலும் பல்வேறுபட்ட பண்பாட்டுக் கலவையாலும் விண்ணியல், நிலத்தியல், சிற்பவியல், இலக்கியம், மருத்துவம், வேளாண்மை முதலான துறைகளில் சிறந்து விளங்கியது இந்திய துணைக்கண்டம் (Pandi 2025). இந்திய அறிவு மரபின் செழுமையையும் போக்கையும் உலகெங்கும் அறிவிக்கவும் இந்திய மாணவர்கள் கற்றுத் தெளியவும் தேசிய கல்விக் கொள்கை 2020 வழிவகை செய்துள்ளது (MoE 2020). இந்திய அறிவு மரபு இந்திய மண்ணில் தோன்றி கிளைபரப்பி வளர்ந்து கொண்டிருக்கும் மரபு மருத்துவ முறைகளைப் பற்றிப் பேசாமல் முழுமை பெறாது. உயிருடன் கூடிய உடலியக்கம் பன்னெடுங்காலம் செம்மையாகவும் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகியவற்றைக் கடந்து நீண்ட ஆயுளுடன் பேரின்ப வாழ்வை வாழ, வழியை அறிந்த பேரறிவு சித்தம் எனப்படும் (மாண்டெலா 2025). அவ்வறிவை உடைய சித்தர்களால் தமிழ் நிலத்தில் தோற்றுவிக்கப்பட்டுத் தமிழால் வளர்க்கப்பட்டு தமிழாலும் தமிழர்களாலும் உலகின் பல

| Copyright © Author(s)

பகுதிகளிலும் வியாபித்திருப்பது தமிழர் மருத்துவமாம் சித்த மருத்துவமாகும். தமிழ் மண்ணில் செடி, கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலமென கி. ஆ. பெ. விஸ்வநாதன் அவர்களால் உறுதியாகச் சொல்லப்பட்ட தொன்மைச் சிறப்பு வாய்ந்தது நம் சித்த மருத்துவம் (விஸ்வநாதன் 2008).

தொன்மையும் பன்மையும் வளமையும் சீர்மையும் நிறைந்த பெருந்திரள் வெளியைக் கொண்ட தமிழ் இலக்கியம் காலக்கோட்டில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது (வரதராசனார் 1972).

| வ. எண் | காலப்பிரிவு | இலக்கியப் பிரிவு | காலம் |
|---|---|---|---|
| 1 | பழங்காலம் | சங்க இலக்கியம் | கி. மு. 500 – கி. பி. 200 |
| | | நீதி இலக்கியம் | கி. பி. 100 – கி. பி. 500 |
| | | பழைய காப்பியங்கள் | கி. பி. 300 – கி. பி. 500 |
| 2 | இடைக்காலம் | பக்தி இலக்கியம் | கி. பி. 600 – கி. பி. 900 |
| | | காப்பிய இலக்கியம் | கி. பி. 900 – கி. பி. 1200 |
| | | உரை நூல்கள் | கி. பி. 1200 – கி. பி. 1500 |
| | | புராண இலக்கியம் | கி. பி. 1500 – கி. பி. 1800 |
| 3 | இக்காலம் | கிறித்தவ இலக்கியம், கட்டுரை & நாவல் வளர்ச்சி | 19 ம் நூற்றாண்டு |
| | | சிறுகதை, வாழ்க்கை வரலாறு, ஆராய்ச்சி | 20 ம் நூற்றாண்டு |

***அட்டவணை 1: தமிழ் இலக்கியத்தின் காலவரிசைப் பிரிவுகள் (வரதராசனார் 1972 அடிப்படையில்)***

இயல், இசை, நாடகம் என விரிந்த இவ்வனைத்து வகை இலக்கியங்களும் சரி, தமிழின்

தொன்மையான இலக்கணமும் சரி மருத்துவத்தைப் பேசாமல் விட்டதில்லை. தொல்காப்பியம் (நரேந்திரன் 2018), சங்க இலக்கியங்கள் (Jeyavenkatesh 2023), பக்தி இலக்கியங்கள் (சரவணன் 2024), காப்பிய இலக்கியங்கள் (வெங்கடேசன் 1998) அனைத்துமே மருத்துவத்தை விளக்கியுள்ளன. ஆயினும் தமிழ் மருத்துவ இலக்கியம் என்றொரு வகைப்பாடு ஏற்படுத்தப்படாமலே உள்ளது.

அக்கர இலக்கணம் முதல் வாக்குத் தம்பம் வரையிலான ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஒன்றாக மருத்துவக் கலையையும் போற்றிக் காத்தது தமிழர் மரபாகும் (நாகேஸ்வரன் 2004). நோயறிதல், நோய்க்கணித்தல், மருந்து செய்தல் மற்றும் மருந்து அளித்தல் உள்ளிட்ட அனைத்தும் சேர்ந்ததே மருத்துவம் செய்தலாகும். உள்மருந்து முப்பத்தி இரண்டு, வெளி மருந்து முப்பத்தி இரண்டு என மொத்தம் அறுபத்து நான்கு வகை மருந்துகளைக் கையாள்கிறது சித்த மருத்துவம். மருத்துவ அகராதிகள், உடலியங்கியல், நோய்த் தடுப்பு, நோய்க் கணித்தல், மருந்துருவாக்கம் மற்றும் வர்மம், தொக்கணம் அடங்கிய மருத்துவம் சார்ந்த அனைத்தையும் விளக்கும் சித்த மருத்துவ இலக்கியங்களுக்கு மத்தியில் மருந்துருவாக்கத்திற்கான இலக்கியங்களே அதிகம். தாது, தாவர மற்றும் ஜீவ சரக்குகளைச் சேகரிப்பது தொடங்கி சுத்திகரித்து மருந்து செய்வதை ஆவணப்படுத்தியது நம் தமிழ் மருத்துவ இலக்கியம். கசக்குவது, இடிப்பது, அரைப்பது, எரிப்பது, மாரணிப்பது, புடமிடுவது மற்றும் பதங்கிப்பது போன்ற எளிய மற்றும் கடினமான மருந்து செய்முறைகள் மருந்து உருவாக்கத்தில் எடுத்தாளப்படுவதைத் தமிழ் இலக்கியங்கள் விவரிக்கின்றன.

மூலிகைகளைத் தகுந்த முறையில் குடிநீராகவும் ஊறல் நீராகவும் வாலையிலிட்டு வடித்துத் தீநீராகவும் செயநீராகவும் மாற்றி மருந்தாகப் பயன்படுத்தும் முறைகளை விளக்கும் தமிழ் மருத்துவ நூல்கள் உண்டு. சூரணித்தல், தைலமிறக்கல், பற்பமாக்குதல், செந்தூரமாக்குதல், சுண்ணமாக்குதல் மற்றும் பதங்கமாக்குதல் மூலம் மருந்து செய்யும் தொழில்நுட்பங்களைக் கூறி குறிப்பிட்ட செய்பாகத்தில் பெறப்பட்ட மருந்து முடிந்துள்ளதா எனப் பரிசோதிக்கும் நுட்ப முறைகளையும் தமிழர் மருத்துவம் நெடுங்காலத்திற்கு முன்பே பதிவு செய்துள்ளது. தற்போதைய அறிவியல் உலகில் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தால் பெரும் பொருட்செலவிலும் கூட நானோ துகள் மருந்துகளை உருவாக்குதல் அரிய நிகழ்வாக இருக்கும் நிலையில், எளிய முறைகள், எளிய உபகரணங்கள் மற்றும் நன்கு பரிச்சயமான மூலிகைகள் மூலம் பெரிய உலோகங்களை சிதைத்து நானோ துகள் அளவு மருந்துப் பொருளாக மாற்றும் வழிமுறைகளை நம் தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

பல்வேறு ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் தமிழ் இலக்கிய மருத்துவ முறைகளையும் மருத்துவச் சான்றுகளையும் ஆய்ந்துள்ள போதும் மருந்து செய் இலக்கியங்களையும் அவற்றின் தொழில்நுட்பங்களையும் எடுத்துக்கூறியவை குறைவு. நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள், நவகோடி சித்தர்கள் என்ற பல வகைப்பாட்டின் கீழ் வரும் தேரையர், போகர், அகத்தியர், திருமூலர், கருவூரார், கொங்கணவர், கோரக்கர் முதலான சித்தர்கள் அருளிச் செய்த மருந்து செய் தொழில்நுட்பங்களைப் பாதுகாக்கும் தமிழ் மருத்துவ இலக்கியங்களில் காணப்படும் மருந்துத் தொழில்நுட்பங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மருந்து செய் முறைகள்**

*கருக்கு மருந்து களரைக்கு மருந்துகள் கசக்கு மருந்துகணீர்*
*கலக்கு மருந்துகள் வறுக்கு மருந்துகள் கழற்று மருந்துகள் தீ*
*யுருக்கு மருந்துகளிறுக்கு மருந்துகளு லர்த்து மருந்துகள் மே*
*லுரைக்கு மருந்துகள் குழப்பு மருந்துக ளுடைக்கு மருந்துகள் மே*
*னருக்கு மருந்துக ளுருட்டு மருந்துக ணகர்த்து மருந்துகள் கை*
*நசுக்கு மருந்துகள் பொசுக்கு மருந்துகள் நனைக்கு மருந்துகள் தீ*
*எரிக்கு மருந்துகள் வழிக்கு மருந்துக ளிடிக்கு மருந்துகள் கல்*
*லிழைக்கு மருந்துகள் குழைக்கு மருந்துக ளெடுக்கு மருந்துகளே*

கருக்கல், அரைத்தல், கசக்குதல், கலக்குதல், வறுத்தல், கழற்றுதல், உருக்குதல், இருத்தல், உலர்த்தல், உரைத்தல், குழப்புதல், உடைத்தல், நறுக்குதல், உருட்டுதல், நகர்த்துதல், நசுக்குதல், பொசுக்குதல், நனைத்தல், எரித்தல், வழித்தல், இறுக்குதல், இழைத்தல், குழைத்தல், எடுத்தல் போன்ற இருபத்து நான்கு வகையான தொழில்கள் மருந்துருவாக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றன எனத் தேரன் தரு எனும் தமிழ் இலக்கியம் எடுத்தியம்புகிறது (தேரன் தரு 350, பாடல் 52).

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**




***படம் 1: சித்த மருத்துவத் தயாரிப்பில் பயன்படும் இருபத்து நான்கு மருந்து செய் முறைகள் (தேரன் தரு 350, பாடல் 52 அடிப்படையில்)***

**மருந்து வகைகளும் அவற்றின் ஆயுட் காலமும்**

**உள்மருந்துகள்**

*உள் மருந்தே சுரசஞ் சாறு குடிநீர் கற்க*
*முக்களியடையோர் சாமம்*
*உயர் சூரணம் பிட்டு வடகம் வெண்ணெய்நான்கி*
*னுயிர் மூன்று திங்களாகும்*
*விள் மணபாகு நெய் ரசாயன மிளகனால்*
*மேவு மறு திங்கள் ளேண்ணெய்*
*விரலிடு முயர்ந்தமாத் திரை கடுகு பக்குவம்*
*மிளிர் தேனி னூறல் தீநீர்*
*கொள்ளாறு மோராண்டு மெழுகொடு குழம்பைந்து*
*கோப்பதங் கம்பத்தாம்*
*குருதி பொடித யெழுபானொ டைந்தாண்டு நீறுகட்*
*டுருக்கு களங்கு நானூறு*
*எள்ளிடாச் சுண்ணம்மைநூறு கற்பம்சத்து*

*குருகுளிகை மிக்காயுளென்*

*றெவருமகிழ் சித்தர் முப்பதிரண்டுடக மருந்துரைத்*

*தவா யுள்ள வாரே.*

**வெளிமருந்துகள்**

*வெளிமருந் தேகட்டு பற்றொற்ற டம்பூச்சு*

*வேதுபொட் டணம் தொக்கணம்*

*மென்புகைமை பொடிதிமிர்தல் கலிக்கநசி யமூதல்*

*மேவுநா சிகாபரணமும்*

*களிம்புசீலை நீர்வர்த்தி சுட்டிகைச லாகைபசை*

*களிபொடி முறிச்சல்கீறல்*

*காரமட்டை அறுவை கொம்புரிஞ் சல்குருதி*

*கண்டுவாங் குதல்பீச்சுவை*

*வெளிமருந்து முப்பத்தி ரண்டென்று கூறினர்*

*விண்ணுலவு சித்தராமால்*

*மேல்வர்த் தியும்பசை பீச்சுமை நசியமும்*

*மென்கலிக் கங்களோராண்டு*

*டொலிவர்த்தி பொடியிநீர் நாசிகா பரணமிவை*

*யொருமூன்று திங்களாகும்*

*உயர்சீலைக ளிம்பிவைக ளாறுதிங் களாகுமென்*

*றோதினா ராயுளுமரோ.*

இவ்விரு பாக்களும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் முப்பத்திரண்டு வகையான உள் மருந்து வகைகள், வெளி மருந்து வகைகள் மற்றும் அவற்றின் ஆயுட் காலத்தையும் எடுத்துரைக்கிறது. ஆயுட்காலத்தை அதிகமாகக் கொண்ட மருந்துகளைத் தயாரித்துப் பாதுகாத்து வைத்திருந்த தொழில்நுட்பங்களில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதன் சான்றே இதுவாகும். மருந்துத் தயாரிப்புகள் எவ்வளவு காலம் மருத்துவ வீரியத்துடனிருக்கும் என்பதைக் கணிக்கும் தொழில்நுட்பங்களைத் தமிழ் இலக்கியங்கள் விரிவாக உள்ளடக்கியவை என்பதை இதன் வழி தெளிவாக அறியலாம்(தியாகராஜன் *1981*)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**

| வ. எண் | உள் மருந்துகள் | ஆயுட்காலம் | வெளிமருந்துகள் | ஆயுட்காலம் |
|---|---|---|---|---|
| 1 | சுரசம் | மூன்று மணி நேரம் | கட்டு | தயாரித்த உடன் |
| 2 | சாறு | மூன்று மணி நேரம் | பற்று | |
| 3 | குடிநீர் | மூன்று மணி நேரம் | ஒற்றடம் | |
| 4 | கற்கம் | மூன்று மணி நேரம் | பூச்சு | |
| 5 | உட்களி | மூன்று மணி நேரம் | வேது | |
| 6 | அடை | மூன்று மணி நேரம் | பொட்டணம் | |
| 7 | சூரணம் | மூன்று மாதங்கள் | தொக்கணம் | |
| 8 | பிட்டு | மூன்று மாதங்கள் | புகை | |
| 9 | வடகம் | மூன்று மாதங்கள் | மை | ஓராண்டு |
| 10 | வெண்ணெய் | மூன்று மாதங்கள் | பொடிதிமிர்தல் | |
| 11 | மணப்பாகு | ஆறு மாதங்கள் | கலிக்கம் | ஓராண்டு |
| 12 | நெய் | ஆறு மாதங்கள் | நசியம் | |
| 13 | ரசாயனம் | ஆறு மாதங்கள் | ஊதல் | |
| 14 | இளகம் | ஆறு மாதங்கள் | நாசிகாபரணம் | 3 மாதங்கள் |
| 15 | எண்ணெய் | ஓராண்டு | களிம்பு | 6 மாதங்கள் |
| 16 | மாத்திரை | ஓராண்டு | சீலை | |
| 17 | கடுகு | ஓராண்டு | நீர் | 3 மாதங்கள் |
| 18 | பக்குவம் | ஓராண்டு | வர்த்தி | |
| 19 | தேநூறல் | ஓராண்டு | சுட்டிகை | |
| 20 | தீநீர் | ஓராண்டு | சலாகை | |

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**

| வ. எண் | உள் மருந்துகள் | ஆயுட்காலம் | வெளிமருந்துகள் | ஆயுட்காலம் |
|---|---|---|---|---|
| 21 | மெழுகு | ஐந்து ஆண்டுகள் | பசை | ஓராண்டு |
| 22 | குழம்பு | ஐந்து ஆண்டுகள் | களி | |
| 23 | பதங்கம் | பத்து ஆண்டுகள் | பொடி | 3 மாதங்கள் |
| 24 | செந்தூரம் | 75 ஆண்டுகள் | முறிச்சல் | |
| 25 | பற்பம் (நீறு) | 100 ஆண்டுகள் | கீறல் | |
| 26 | கட்டு | 100 ஆண்டுகள் | காரம் | |
| 27 | உருக்கு | 100 ஆண்டுகள் | அட்டை விடல் | |
| 28 | களங்கு | 100 ஆண்டுகள் | அறுவை | |
| 29 | சுண்ணம் | 500 ஆண்டுகள் | கொம்பு கட்டல் | |
| 30 | கற்பம் | மிக்க ஆயுள் (வாழ்நாள் முழுதும்) | உறிஞ்சல் | |
| 31 | சத்து | மிக்க ஆயுள் (வாழ்நாள் முழுதும்) | குருதி வாங்குதல் | |
| 32 | குரு குளிகை | மிக்க ஆயுள் (வாழ்நாள் முழுதும்) | பீச்சு | ஓராண்டு |

***அட்டவணை 2: முப்பத்திரண்டு உள்மருந்து வகைகளும் முப்பத்திரண்டு வெளிமருந்து வகைகளும் அவற்றின் ஆயுட் காலமும் (சிவசண்முக ராஜா 1990)***

**மருந்து செய் விதிகளைக் கூறும் இலக்கியம்**

**சிந்தாமணி மருத்துவ இலக்கியம்**

சமணர் காலத்தில் தென்னிந்தியாவில் தமிழர்கள் கையாண்டு வந்த மருத்துவ முறைகளைத் தொகுத்து எழுதப்பட்ட நூல்கள் சிந்தாமணி மருத்துவ நூல்கள் ஆகும். உலோக, பாடாண மருந்து முறைகளையும் அவற்றில் பயன்படுத்தப்படும் ரசத்தை (பாதரசம்) எவ்வழிகளில் பெறலாம்

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**

என்பதையும் விளக்குகின்றன. மூலிகைகளிலிருந்தும் பிற உலோகங்களிலிருந்தும் பாதரசம் எடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உச்சத்தின் களமாகத் தமிழ் இலக்கியங்கள் விளங்கியுள்ளன.

பதார்த்த குண சிந்தாமணி, அகத்தியர் வைத்திய சிந்தாமணி, வாகட சிந்தாமணி, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி, இராமதேவர் வைத்திய சிந்தாமணி, ரண வைத்திய சிந்தாமணி, பிரம்மமுனி சிந்தாமணி தாது நிதானம், திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணி முதலியவை சிந்தாமணி இலக்கியத்திற்குச் சில எடுத்துக்காட்டுக்களாகும் (வாசுதேவன் 2013). சாறு, சுரசம், கற்கம், உட்களி, பிட்டு முதலான மருந்துகளின் இலக்கணம் மற்றும் செய் நுட்பங்களைத் தசாங்க நிகண்டு எனும் நூல் விளக்குகிறது (தியாகராஜன் 1981).

**குடிநீர் விதிகள்**

குடிநீர், மருந்து நீர், உண்ணீர், வாய் குடித்திடும் புனல் என்ற பெயர்களில் வழங்கப்படும் கஷாயம் செய்யும் விதிகள் (நீர் அளவு, சரக்கு அளவு, குறுக்கும் அளவு, எரிப்புத் திட்டம் – விறகு, அக்கினி, நேரம்), குடிநீருக்கு சிறந்த நீர் வகை, மூலிகைப் பாகங்களுக்கு ஏற்ப மாறுபடும் எரிப்புத் திட்டம் உள்ளிட்ட தகவல்களை தேரையர் கரிசல் மற்றும் தேரையர் தைல வருக்க விதி எடுத்துரைக்கின்றன (தியாகராஜன் 1981). தேரன் கியாழம் 100 என்னும் குடிநீர் நூல் நூறு வகையான குடிநீர் செய்முறைகளை நீர் சேர்க்கும் அளவும் குறுக்க வேண்டிய அளவுமான விதிகளுடன் பின்வருமாறு கூறுகிறது.

“எட்டி லொன்றாய்க் காய்ச்சி” – சரக்குகளின் அளவுக்கு எட்டு மடங்கு நீர் சேர்த்துக் காய்ச்சி ஒரு பாகமாய்க் குறுக வைத்து குடிநீராக்கும் முறை. எ. கா: பெரும்பாலான சுரக் கியாழங்கள்.

“நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொப்பளிக்க” – 1/4 ஆகக் காய்ச்சும் முறை. எ. கா: மருக்காரைக் குடிநீர் (பாடல் எண் 56).

“மூன்றி லொன்றாகக் காய்ச்சி” – 1/3 ஆகக் காய்ச்சும் முறை. எ. கா: சக்தி குன்மக் கியாழம் (பாடல் எண் 83).

“யிரண்டு நாழி நீருழக்காக்கிக் கொண்டால்” – இரண்டு நாழி நீரை உழக்களவு குறுக்குதல். எ. கா: அதிசாரக் கியாழம் (பாடல் எண் 18) (*வீராசாமி*நாயுடு 1871).

**உலோக மாரணம்**

உலோகங்களை இயல்பு நிலையிலிருந்து மாற்றுவதை உலோக மாரணம் என்கின்றனர் சித்தர்கள். மூலிகைச் சாறுகளின் துணையுடனும் பிற திரவ வகைகளாலும் சில உலோகக்

கலவையாலும் உலோகங்களை மடிக்கும் முறைகளையும் சித்தர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர் (அரங்கராஜன் 2001). எடுத்துக்காட்டாக, "பரையினுர மாலூரச் சாற்றால் பற்பமாகும்" – வில்வ இலைச் சாற்றால் கந்தகம் மாளும் எனத் தேரன் மகா கரிசல் பதிவு செய்துள்ளது (தேரன் மகா கரிசல்). "காடிதான் நீறிடும் நவலோகத்தை நீற்றிடும்" – காடி நீர் நவலோகங்களையும் நீற்றுப் போகச் செய்யும் நுட்பத்தை திருவள்ளுவர் நூல் விளக்குகிறது (பாலகிருஷ்ணன் 1992). உலோகங்களையும் வடக வகையான மருந்தாக மாற்றும் செய்பாகத்தைப் பரராசசேகரம் எனும் இலக்கியம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் பதிவு செய்துள்ளது (மண்டூரம் வடகம் – மண்டூரம் என்பது சூடேற்றப்பட்ட இரும்பைப் பட்டறையில் அடிக்கும் போது தெறிக்கும் தூள்) (கோவிந்தன் 1989). நட்புச் சரக்குகள் மற்றும் பகைச் சரக்குகள் பற்றியும் தமிழ் மருத்துவம் விவரிக்கின்றது. ஒரு மருந்துமூலப் பொருளின் மடிக்க/நீக்க வேண்டிய குணத்தை பகைச் (சத்ரு) சரக்கினால் நீக்கி, அதன் மேம்பட்ட குணத்தை வெளிக்காட்ட நட்புச் (மித்ரு) சரக்கைப் பயன்படுத்துவது குறித்தும், சுவையின் அடிப்படையில் உப்புச் (சத்ரு) சரக்குகள் மற்றும் புளிச் (மித்ரு) சரக்குகள் குறித்தும், மூலிகைகளில் உள்ள உலோகச் சத்துக்கள் மற்றும் அவற்றைப் பிரித்தெடுக்கும் முறைகள் குறித்தும் உயர் தொழில்நுட்பங்களைத் தமிழ் இலக்கியம் ஆவணப்படுத்தியுள்ளது (தானுப்பிள்ளை 1982).

**கற்ப மருந்துகள்**

நரை, திரை, மூப்பு நீங்கி நீண்டகாலம் நோயின்றி வாழ கற்ப மருந்துகள் செய்யும் வழிகளை பயன்படுத்தும் முறைகள், நாள் அளவுடன் தேரன் யமக வெண்பா (தேரன் யமக வெண்பா), போகர் கற்பம் 300, திருவள்ளுவா நாயனார் கற்பம் முதலானவை கூறுகின்றன (தியாகராஜன் 2008).

**தொகுப்பு**

பதினெண்சித்தர் வைத்தியத் திறவுகோல் எனும் நூல் பன்னிரண்டு பாகங்களைக் கொண்டது; முதலிரண்டு பாகங்கள் சித்த மருத்துவத் தத்துவங்களையும், பிற பாகங்கள் பின்வருமாறு மருந்துசெய் விதிகளையும் விளக்குகின்றன (ஏகாம்பரமுதலியார் 1902).

| வ. எண் | பாகம் | மருந்து முறை |
|---|---|---|
| 1 | மூன்று | பேதி மருந்துகள் |
| 2 | நான்கு | மாத்திரை |
| 3 | ஐந்து | சூரணம் |
| 4 | ஆறு | பற்பம் |
| 5 | ஏழு | செந்தூரம், மெழுகு |
| 6 | எட்டு | லேகியம் |
| 7 | ஒன்பது | தைலம் |
| 8 | பத்து | கியாழம் |
| 9 | பதினொன்று | கண்டாவிழ்தம் |
| 10 | பன்னிரண்டு | சுத்தி, கட்டு |

***அட்டவணை 3: பதினெண்சித்தர் வைத்தியத் திறவுகோலில் பாகம் வாரியாகக் கூறப்படும் மருந்து முறைகள் (ஏகாம்பரமுதலியார் 1902 அடிப்படையில்)***

**ஈழத்து சித்த மருத்துவ இலக்கியம்**

பரராசசேகரம், அங்காதிபாதம், செகராசசேகரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், சொக்கநாதர் தன்வந்திரியம், கிறிஸ்தவ பண்டிதர் வைத்திய திரட்டு, வைத்திய சிந்தாமணி, வைத்திய தெளிவு, வைத்திய பூரணம் 205, சுதேச வைத்திய அவுடதத் திரட்டு, ஆயுள்வேத அவுடத சங்கிரகம் (ஆயுள்வேதம் எனப் பெயர் இருந்த போதும் அதனுள் அகத்தியர், போகர் முதலானவர்களின் குறிப்பைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அவை தமிழ் இலக்கியங்களே ஆகும்) முதலான நூல்கள் பற்பம், செந்தூரம், சுண்ணம் உள்ளிட்ட பெரு மருந்துக் குறிப்புகளைக் கொண்டுள்ளன (சிவசண்முகராஜா 1993).

**முடிவுரை**

பழம்பெருமைகள் பலவற்றைக் கொண்ட இந்திய அறிவு அமைப்பில் தமிழர் அறிவு அமைப்பு தன் இலக்கிய வளத்தால் தலையாய இடம் வகிக்கிறது. தமிழர் அறிவுக் கொடையில் உச்சமாக

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**

மாகுடத்தை அலங்கரிப்பது தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவமும் சித்த மருத்துவ இலக்கியங்களும் என்றால் அது மிகையாகாது.

*"வெந்தழலில் ரதம் வைத்தைந்து லோகத்தையும்*
*வேதித்து விற்று ண்ணலாம்"*

அட்டமா சித்திகள் கைவரப்பெற்றால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியலிடும் இப்பாடல் பாதரசத்தை முதன்மையாகக் கொண்டு உலோகங்களை மருந்தாக மாற்றும் முறைகளையும் பெரும் பயனாகக் குறிப்பிடுகிறது (சிவசண்முகராஜா 1990). "மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்" என நற்றிணையும் மருந்துகள் பற்றிய ஆராய்ச்சியைச் சுட்டுகிறது (குணசீலன் 2010). எனவே மருத்துவத்தில் மட்டுமல்ல, மருத்துவ ஆராய்ச்சியிலும் தமிழர் மருத்துவ இலக்கியங்களே இந்திய அறிவு அமைப்பில் முன்னோடியாகத் திகழ்கின்றன.

**Works Cited (மேற்கோள் நூல்கள் – MLA வடிவம்)**


[1.] Jeyavenkatesh, J. Journal of Indian Medical Heritage, vol. 2, no. 4, Oct.–Dec. 2023, pp. 182–199.

[2.] Kale, Ajay. "Indian Knowledge Systems (IKS): Bridging Ancient Wisdom with Modern Education and Technology." International Journal of Engineering Research & Technology (IJERT), vol. 15, no. 3, Mar. 2026.

[3.] Ministry of Education. National Education Policy 2020. Government of India, 2020.

[4.] Pandit, S. D. "Reviving Indian Knowledge Systems (IKS): Bridging Tradition with Modernity." International Studies, vol. 62, no. 1, 2025, pp. 11–29.

[5.] அரங்கராஜன், ச., டாக்டர். அகத்தியர் லோக மாரணம் 110. சரஸ்வதி மஹால் நூலகம், 2001.

[6.] ஏகாம்பரமுதலியார். பதினெண்சித்தர் வைத்தியத் திறவுகோல். சிற்றம்பலவிலாஸ் பிரஸ், 1902.

[7.] குணசீலன், இரா., முனைவர். சங்கத்தமிழர் அறிவியல்: நற்றிணை, வேர்களைத் தேடி. 2010.

[8.] கோவிந்தன், த. பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும். திருமகள் நிலையம், 1989.

[9.] தானுப்பிள்ளை, சிதம்பர. மருத்துவத் திறவுகோல். சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், 1982.

[10.] தியாகராஜன், அ. இரா. குணபாடம் தாது ஜீவ வகுப்பு. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரகம், 1981.

[11.] தியாகராஜன், ஆர்., டாக்டர். சித்த மருத்துவம் சிறப்பு. இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை, 2008.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.22**

[12.] தேரன் தரு 350. ஆக்கம்: த. நா. ப. பெ. சி. சங்கம்.

[13.] தேரன் மகா கரிசல். நந்தி பதிப்பகம்.

[14.] தேரன் யமக வெண்பா. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரகம், 2004.

[15.] தேவநாதன். தாயுமானவர் பாடல்கள் (தன்னையறிதல் ஆனந்தம்). சங்கர் பதிப்பகம், 2020.

[16.] நரேந்திரன், சு. "தொல்காப்பியத்தில் உடற்கூறும் அறுவை மருத்துவமும்." கீற்று, 2018.

[17.] நாகேஸ்வரன், கனகசபாபதி. யாழ் திருநெறிய தமிழ்ச் சங்கம். இலங்கை, 2004.

[18.] பாலகிருஷ்ணன், பி. ஆர். திருவள்ளுவர் நாயனார் அருளிச் செய்த பஞ்ச ரத்தினம், *திருமகள் அச்சகம்*. 1992.

[19.] மாண்டெலா, மரு. து. தமிழர்களின் உலோக மருந்தறிவியல்.*சிலம்பொலிசெல்லப்பனார் தமிழ்க்காப்பு மன்றம் 2025.*

[20.] வரதராசனார், மு. தமிழ் இலக்கிய வரலாறு. சாகித்திய அகாடமி, 1972.

[21.] வாசுதேவன். இராவணன் இயற்றிய இராசராச சிந்தாமணி. வானவில் பதிப்பகம், 2013.

[22.] வெங்கடேசன், க. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம். சிறீ சக்தி பதிப்பகம், 1998.

[23.] விஸ்வநாதன், கி. ஆ. பெ. தமிழின் சிறப்பு. பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், 2008.

[24.] வீராசாமிநாயுடு. தேரன் கியாழம் 100. 1871.

[25.] சரவணன், நா. தீபா. "தமிழர் மருத்துவம்." கீற்று, 2024.

[26.] சிவசண்முகராஜா, சே. சித்த மருந்துகளும் மருந்தாக்கவியலும். சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 1990.

[27.] சிவசண்முகராஜா, சே. ஈழத்து சித்த மருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம். சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 1993.

[28.] ஜெயவெங்கடேஷ், ஜெ. அகம் புறம் 64 சித்த மருத்துவ முறைகள். 2014.

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*